மாவட்டங்களிலேயிருந்து, அங்கே வந்து, காவிரி ஆற்றிலேயிருந்து தீர்த்தத்தை எடுத்து பழனிக்குச் செல்கிற பக்தர்கள் அதிகம். மிகப் பெரிய அளவிலே அங்கே பக்த கோடிகளும், பொது மக்களும், சுற்றுலாப் பயணிகளும் தரிசனத்திற்கு வருகின்ற அந்தத் தலத்தை சுற்றுலாத் தலமாக அமைக்க அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மூலக் கேள்விக்கும், இந்தக் கேள்விக்கும் சம்பந்தமில்லாமல் இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர், அவர்களுடைய ஆர்வத்தின் அடிப்படையில் கேட்டிருப்பதால், அங்கு அதிகமான சுற்றுலாப் பயணிகள் வருகை தருவதாக இருந்தால், நிச்சயமாக அடிப்படை வசதிகள் செய்து தரப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண்கள் 134 மற்றும் 135, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

அடுத்து வினா எண் 136, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்.

136—

கம்பிவடப் பாதை

***692—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்குக் கம்பிவடப் பாதை அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவள்ளூர் மாவட்டம், திருத்தணி அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு நடந்து செல்ல படிவழிப் பாதைகள் ஏற்கெனவே இரண்டு இருக்கின்றன. அவை தவிர, வாகனங்கள் சென்று வர மலைவழிச் சாலை ஒன்றும் உள்ளது. எனவே, மேற்படி திருக்கோயிலுக்குப் பக்தர்கள் சென்று திரும்புவதற்குக் கூடுதலாக கம்பிவடப் பாதை அமைக்க அவசியம் இல்லை என்று இத்துறை கருதுகிறது.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
TRUTH ALONE TRIUMPHS

2006 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய வடக்கு எல்லையிலே அமைந்திருக்கின்ற திருத்தணி, அறுபடை வீடுகளிலே மிகவும் புகழ் வாய்ந்த கோயில். இன்றைக்குச் சரியாக 38 ஆண்டுகள்—31–8–1968 அன்று நம்முடைய முதலமைச்சராக இருந்த பேரறிஞர் அண்ணா அவர்கள் அந்தத் திருத்தணி மலைக்குச் செல்கின்ற பாதையினைத் திறந்து வைத்தார்கள். இன்றைக்கு 38 ஆண்டுகள் ஆகின்றன. ஆடிக் கிருத்திகை போன்ற நாட்களிலே அங்கே பக்தர்கள் அதிகம் கூடுகின்றார்கள். அப்படிக் கூடுகின்ற நேரத்திலே, இருக்கின்ற பாதைகள் போதாமல் இருக்கின்ற காரணத்தால், அந்த மலைக்குப் பின்புறமாக இரண்டாவது பாதை உருவாக்கப்பட்டு வருகிறது. ஏறக்குறைய 40 சதவீதப் பணிகள் முடிந்துவிட்டிருக்கின்றன. மீதிப் பணிகளை முடிப்பதற்கு வன இலாகாவினுடைய அனுமதி தேவை என்ற காரணத்தால் தடங்கல் ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ஆகவே, வன இலாகாவைத் துரிதப்படுத்தி, வனத் துறையினுடைய அனுமதியை அரசு பெறுமா? திருப்பதி திருக்கோயிலிலே ஏழு மலைகளையும் அங்கு இருக்கின்ற Forest Department—வனத் துறை அந்தக் கோயிலுக்கு அப்படியே கொடுத்துவிட்டிருக்கின்றது. எந்த ஒரு கட்டுப்பாடும் இல்லாமல் முழுமையாக ஒப்படைத்திருக்கிறது. அந்த முன்னுதாரணத்தைப் பின்பற்றி, நம்முடைய திருத்தணி மலையினை வனத் துறை முழுமையாக அறநிலையத் துறையிடம் ஒப்படைக்குமா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன். அந்த இரண்டாவது பாதை எப்போது முடிவடையும் என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

முற்பகல் 9–40

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இராமன் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, இரண்டாவது மலைவழிப் பாதையில் வாகனங்கள் செல்வதற்கு ஏதுவாக 3 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அந்தப் பணி நடைபெற்றுக்கொண்டு வருகிறது. அந்தப் பணியில் இடையிலே சற்றுத் தேக்கம் ஏற்பட்டுக்கொண்டிருந்தாலும்கூட, மீண்டும் முழு வீச்சிலே நடைபெற்று, அது முடிவடைவதற்கான அத்தனை வேலைகளும் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்பதைத் தங்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர்... (குறுக்கீடு) சொல்லுங்கள், இராமன்.*

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்: *திருத்தணி திருக்கோயிலிலே பக்தர்களுக்கு இன்னொரு வேண்டுகோள் உள்ளது. அங்கே இராஜ கோபுரம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை வெகு நாட்களாக இருக்கின்றது. அந்த இராஜ கோபுரத் திருப்பணி எப்போது நடைபெறும் என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மூலக் கேள்விக்கும், இதற்கும் சம்பந்தம் இல்லை.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *இருந்தாலும்கூட, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய டாக்டர் இராமன் அவர்கள் திருத்தணி சுப்பிரமணிய சுவாமி கோயில்மீது கொண்டிருக்கக்கூடிய ஆர்வத்தின் காரணமாக பதில் சொல்கிறேன். அந்தப் பகுதிக்கு, அந்தத் திருத்தலத்திற்கு ஒரு இராஜ கோபுரம் அமைக்க வேண்டுமென்ற கோரிக்கை தொடர்ந்து வைக்கப்பட்டிருக்கிறது என்றும் தெரிவித்திருக்கிறார். அதற்கான திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு, ஏறத்தாழ 65 இலட்சம் ரூபாய் செலவிலே புதிய இராஜ கோபுரம் ஒன்றை அமைப்பதற்குத் துறை, அந்த ஆயத்தப் பணிகளிலே ஈடுபட்டிருக்கிறது என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கோ. அரி. (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கமணி.*

திரு. பி. தங்கமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியான திருச்செங்கோடு தொகுதியில் பிரசித்தி பெற்ற அர்த்தநாரீஸ்வரர் கோயில் உள்ளது. அந்தக் கோயிலிலே வருடிக்கல் என்ற ஒரு இடம் உள்ளது. குழந்தை இல்லாத தாய்மார்கள் எல்லாம் அதைச் சுற்றினால் குழந்தை கிடைக்கும் என்ற ஐதீகத்தின்பேரால் அதைச் சுற்றி வருகிறார்கள். அதற்கு நடக்கின்ற பாதை இரண்டு அடி அகலத்தில் இருக்கின்ற காரணத்தினால், விபத்து ஏற்படுவதற்கு வாய்ப்பு உள்ளது. அது மட்டுமல்லாமல், அந்த ஐதீகத்தையே மாற்றுகின்ற அளவிற்கு...*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *கம்பிவடப் பாதைதான் கேள்வி.*

திரு. பி. தங்கமணி: *கம்பி வேலி அல்லது தடுப்புச் சுவர் அமைப்பதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதை உங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

2006 செப்டம்பர் 1]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மூலக் கேள்வி கம்பிவடப் பாதை அமைப்பது பற்றியது.

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் அவர்கள் இதற்குத் தனியாகக் கேள்வி எழுப்பினால், நல்ல விரிவான பதிலைச் சொல்வதற்கு ஏதுவாக இருக்கும் என்று தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 137, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்.

137—

தரம் உயர்த்துதல்

***433—திரு. பி. பலராமன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசாணை (நிலை) எண் 101, பள்ளிக் கல்வி, நாள் 30-6-2006-ல் திருவள்ளூர் மாவட்டம், பொன்னேரி தொகுதி, சோழவரம் ஒன்றியம், பாடியநல்லூர் அரசு உயர்நிலைப் பள்ளியை மேல்நிலைப் பள்ளியாக நிலை உயர்த்தி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. பி. பலராமன்.

திரு. பி. பலராமன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் வரவேற்கிறேன். அதோடு, பொன்னேரி தொகுதியில் தாழ்த்தப்பட்ட குடும்பங்களைச் சார்ந்தவர்கள், வறுமைக் கோட்டிற்குக்கீழ் உள்ளவர்கள் அதிகமாக வாழ்கின்றார்கள். அரசுப் பள்ளிகளையே முழுமையாக மக்கள் நம்பியிருக்கின்ற காரணத்தால், தற்போது தரம் உயர்த்தி இருக்கின்ற பாடியநல்லூர் மேல்நிலைப் பள்ளியில் போதிய ஆசிரியர்களும், போதிய அளவிற்குக் கட்டட